10.03.2026 OS.No.246/2023 DW2 Name :.கவிதா

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண். 1/14 என்றால் அது எனக்கு சரியாக தெரியாது. அது உட்பிரிவு செய்யபட்டுள்ளதா என்பது எனக்கு தெரியாது. உட்பிரிவு செய்ய நான் மனு எதுவும் செய்யவில்லை. உயில் ஆவணம் என்னுடையது என் தகப்பனார் எனக்கு கொடுத்தது ஆகும். என்னுடைய தாயார் கையில் உயில் ஆவணத்தை கொடுத்தார். அது 2 ஏக்கர் சொத்திற்குண்டானது ஆகும். அதை நான் நேரில் பார்த்தேன். சாட்சி மீண்டும் என் தகப்பனார் உயிலை என் தாயார் கையில் கொடுத்தது பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என கூறுகிறார்.
2. என் தாயார் இறப்பதற்கு சுமார் 2 ஆண்டுகளுக்கு முன் உயிலை ஆவணத்தை என்னிடம் கொடுத்தார். வேறு எதுவும் எனக்கு தெரியாது. சென்ற வாய்தாவில் நான் தாக்கல் செய்த உயில் ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யபட்டது என்றால் சரியல்ல. என் தகப்பனார் எந்த உயில் ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றும் அதை என் தாயார் எனக்கு கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் சகோதர சகோதரிகளுக்கு சேரவேண்டிய கூட்டு குடும்ப சொத்தை அபகரிப்பதற்காக பொய் ஆவணம் ஏற்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 10/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.10 16:12:33 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.